தொகுதி 7] [பகுதி 7

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

சித்ரபானு வருஷம் ஐப்பசி மீ
OCTOBER 1942

பிரசுர கர்த்தர்கள் :

தென் இந்திய ஆசிரியர் சங்கம்

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆசிரிய தர்மம் .... .... .... —R. இராமகிருஷ்ணன், M.A., L.T., | 161 |
| 2. | Extracts from Fort St. George Gazette .... | 164 |
| 3. | தாய் மொழி கற்பித்தல் ... .... .... —M. சுப்பிரமணியம் | 165 |
| 4. | மாணவர்களது ஆரோக்கியம் .... .... .... | 171 |
| 5. | கலையும் கைத்தொழிலும் .... .... .... —R. M. Savur, M.A., | 174 |
| 6. | அனுபவக் கனிகள் .... .... .... —P. N. கல்யாணசுந்தரம் | 176 |
| 7. | செய்தித் திரட்டு .... .... .... | 178 |
| 8. | பத்திராதிபர் குறிப்புகள் ... .... .... | 183 |


## சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினால் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உ-க்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா

1942 அக்டோபர் மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை — M. 7 to 19.
செங்கல்பட்டு — CH. 5, 8.
வட ஆற்காடு — N. A. 32, 61.
தஞ்சாவூர் — Tan. 26, 62.
திருச்சி — Tri. 25, 39.
ராமநாதபுரம் — Rd. 45.
மதுரை — Md. 20.
திருநெல்வேலி — Tin. 58.
சேலம் — S. 15, 43.
கோயமுத்தூர் — Co. 32, 51.

குறிப்பு :—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும்.

—பத்திராதிபர்

# பாலர் கல்வி

| | | |
|---|---|---|
| தொகுதி 7 | 1942 ௵ அக்டோபர் ௴<br>சித்ரபாநு ௵ ஐப்பசி ௴ | பகுதி 7 |


## ஆசிரிய தர்மம்


R. இராமகிருஷ்ணன், M. A., L. T., தாராபுரம்.


ஆசிரியர் தொழில் வெகு இலகுவான வேலையாகும் என்று எண்ணுவோர் பலர் உள்ளனர். ஆனால் அவ்வாறு நினைப்பது பெருந் தவறாகும். வகுப்பறைக்குட் சென்று ஒன்றும் தெரியாத சிறுவர், சிறுமிகட்கு ஏதோ சில விவரங்களைத் தெரிவித்துவந்தால் ஆசிரியர்வேலை தீர்ந்துவிட்டதென எண்ணுவது மதியீனமேயாகும். வகுப்பறைக்குட் செல்லுகின்ற ஆசிரியன் கோயிலுக்குட் செல்லுகின்றவனைப் போலப் பணிவுடனும் பக்தியுடனும் செல்லவேண்டும். ஏனெனில் ஆசிரியன் முன் அமர்ந்துள்ள முப்பது அல்லது நாற்பது மாணவ மாணவிகளும் வெறும் சடப்பொருள்கள் ஆகார். அவர்களில் ஒவ்வொருவரும் ஒரு ஜீவன் ஆவர். உடலின் ஆகிருதி சிறியதாக இருப்பினும் அவ்வுடலி லடக்கமாயுள்ள ஜீவன் நீண்டதொரு வாழ்வினையுடையது. அந்த ஜீவனுடைய மனம் வெளிப்பார்வைக்கு வளர்ச்சியுறாததைப் போலத் தோன்றினாலும் உண்மையில் அது பலப்பல ஸம்ஸ்காரங்களைக் கொண் டுள்ளது. ஒவ்வொரு குழந்தையும் குடத்தினுள் விளக்கைப்போல உள்ளது. குடம் அதனுடைய சுய ஜோதியை மறைத்துள்ளது. மறைவு நீங்கினால் ஜோதி தானாக வெளியாகும். இம்மறைவை நீக்குவ தற்கு ஆசிரியன் தன்னாலான சிறு உதவியைச் செய்கின்றான். ஆசிரியத் தொழில் வெகு புனிதமானது. ஜீவன் தனது சுய ஜோதியுடன் பிரகா சிப்பதற்கு உதவுகின்ற கர்மம் புண்ணிய கர்மம் அல்லவா?

ஆசிரியனின்முன் ஒன்றுமறியாச் சிறு பாலகர்களாக இன்று வீற்றிருப்பவர்கள் பிற்காலத்தில் என்ன முறையில் மலருவார்களோ, யாரறிவர்? எந்த மொட்டு எப்படி விரியுமோ? எந்தப்புற்றில் என்ன பாம்பு இருக்குமோ? எந்தக்குழியில் என்ன புதையல் கிடைக்குமோ? இன்று ஒன்று மறியாப் பாலகனாக உள்ளவன் நாளை ஒரு கவியாகவோ,

600 008

முனியாகவோ, அரசியல் வல்லோனாகவோ, விஞ்ஞான வீரனாகவோ, ஆகலாம். ஆசிரியன் முன்னுள்ள இளம்மாணவர்களிடையே எத்தனை தாகூர்கள், விவேகாநந்தர்கள், காந்திகள், போஸ்கள், பாரதிகள் உள்ளனரோ? யார் கண்டனர்?

ஆதலினால்தான் ஆசிரியன் தன் முன்னுள்ள மாணவ மாணவிகளை எளனமாகவோ, சிறு நோக்கத்துடனோ நோக்காமல் பக்தி விசுவாசத்துடன் அவர்களுடன் பழகவேண்டும். அவர்களைத் திட்டினால் ஆசிரியன் ஈசுவரநிந்தை செய்தவனாகின்றான். அவர்களது உடலை வாட்டக்கூடிய முறையில் மாணவர்களை அடித்தானாகில் பகவானது பொன்னுடலைப் புடைத்தவனாகின்றான். தவறான முறையில் அல்லது குறைவான அளவில் அல்லது உற்சாகக் குறைவுடன் போதனை செய்தானாகில் அவன் வளரும் பயிரை வளராமல் செய்த பாபத்தை, பொங்கிவரும் ஊற்றை அடைத்த பாதகத்தைப் புரிந்தவனாகின்றான்.

ஆசிரியன் முன்னுள்ள மாணவர்களிடையே பலர் அவ்வாசிரியனைக் காட்டிலும் அதி நுட்பமான புத்தியும் அதி மேன்மையான மனோசக்தியும் அதியாச்சரியமான ஆத்ம குணங்களும் பெற்றவர்களாக இருப்பர். இவ்வியல்புகள் பிற்காலத்திலேயே விரிந்து வளர்ச்சியுற்று முழு அளவில் வெளித்தோன்றுமாயினும் சிறு அளவில், நுண்ணிய முறையில் பாலியத்திலேயே மாணவர்களிடையே காணப்படும் அவ்வியல்புகளைக் கண்டறிந்து அவற்றை வளரச்செய்வது ஆசிரியனது கடமையாகும். அதுமட்டுமல்ல. மாணவரிடமிருந்து ஆசிரியன் கற்றுக் கொள்ளக்கூடிய விஷயங்கள் பல உண்டு. மாணவருடைய போதனையை ஏற்றுக்கொள்பவனே உத்தம ஆசிரியனாகின்றான்.

மேலே கூறிய உண்மைகளை இரு உதாரணங்கள் கொண்டு விளக்குவாம்.

சுவாமி விவேகாநந்தரைப்பற்றிக் கேள்வியுறாத ஆசிரியர்கள் எவருமிரார். ஆசிரியன் ஒவ்வொருவனும் அப்பெரியாருடைய ஜீவிய சரிதத்தையும் அவரது சொற்பொழிவுகளையும் படித்து ஆராயவேண்டியது அவசியமாகும். ஏனெனில் சுவாமிஜி—மற்ற பல பெருமைகளைக் கொண்டவராயிருந்ததுடன்—பெரும் கல்வி யாராய்ச்சிக்காரருமாவர். கல்வியைப்பற்றிய தத்துவங்கள் பலவற்றை அவர் விளக்கியிருக்கிறார். மேலும் அவர் ஏற்படுத்திய இராமகிருஷ்ண சங்கத்தாருடைய தேச முன்னேற்ற வேலைகளுள் கல்வியைப் பரப்புவது முக்கியமானதொரு அம்சமாகும். விவேகாநந்தர் ஆற்றல் மிகப் படைத்தவரென்பது உலகறிந்த விஷயம். நாற்பது ஆண்டுகள்கூட அவர் உலகில் வாழ்ந்தாரில்லை. அக்காலத்திற்குள் அவர் இயற்றிய தொண்டுகள் பலப்பலவாகும். பிற்காலத்தில் அவரிடம் காணப்பட்ட மகாசக்திகள் அவர் சிறுவராக விருந்தபொழுதே அவரிடம் ஓரளவில் காணப்பட்டன. சிறு

வராக விருந்தபொழுது விவேகாநந்தருக்கு நரேந்திரநாதர் என்று பெயர்.

நரேந்திரர் பாடசாலையில் இருந்தபொழுது ஒருநாள் பிறருக்கில்லாத சக்தி அவரிடமிருந்தகென்பது வெளியாயிற்று. பாடம் நடந்துகொண்டிருக்கையில் நரேந்திரரும் அவரது நண்பர்களும் பேசிக்கொண்டிருந்ததைக் கண்ட உபாத்தியாயர் உடனே அவர்களைத்தான் கூறியதைச் சொல்லுமாறு பணித்தார். மற்ற மாணவர்கள் பேசாமல் நின்றனர். ஆனால் நரேந்திரருக்கு ஒரே சமயத்தில் இரு காரியங்களைச் செய்கின்ற மனோசக்தி உண்டாதலின் நண்பர்களுடன் பேசியபொழுது பாடத்தையும் கவனித்திருந்தார். ஆசிரியர் கேட்ட கேள்விகளுக்கு அவர் சரியான விடையளித்தார். பையன்களுள் பேசியவன் யார் என்று ஆசிரியர் வினவவும் மற்ற மாணவர்கள் நரேந்திரரைச் சுட்டிக்காட்டவும் ஆசிரியர் இதை நம்பக்கூடவில்லை. பேசிய மாணவர்களை நின்றுகொண்டிருக்குமாறு உபாத்தியாயர் கூறவும் நரேந்திரரும் நின்றார். "நீ நிற்கவேண்டாம்" என்று உபாத்தியாயர் கூறவும் நரேந்திரர் "நான்தான் பேசியவன். நான் நின்றே தீருவேன்" என்று கூறி நின்றுகொண்டிருந்தார்.

மாணவர்களிடமுள்ள இத்தகைய விசேஷமான சக்திகளைத் தெரிந்துகொள்ளுவது ஆசிரியரின் கடமையாகும். அச்சக்திகளைத் தகுந்த முறையில் அபிவிருத்தி செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும். மாணவர்களிற் சிலரை மூடரென்று கூறுவதும் அவர்களை முட்டாள்கள், அறிவிலிகள் என்று திட்டுவதும் மகாபாபமாகும்; அவர்களைப் படைத்த ஈசனை நிந்திப்பதுபோலாகும். ஏனெனில் ஒவ்வொரு சிறுவனிடமும் சிறுமியிடமும் ஈசன் ஒரு விசேஷாம்சத்தை வைத்துள்ளான். அதைக் கண்டுபிடிப்பது ஆசிரியரின் வேலை.

நரேந்திரர் கலாசாலையில் படித்து வந்தபொழுதே அவரது போராசிரியராக விருந்த W. W. ஹேஸ்டீ என்பவர் நரேந்திரருடைய பெருஞ் சக்தியை உணர்ந்திருந்தார். 'நரேந்திரநாதர் உண்மையிலேயே மகா சக்தி படைத்தவர். நான் வெகுதூரம் பிரயாணம் செய்திருக்கிறேன். ஆனால் இவரைப்போன்ற சக்திகளும் அபிவிருத்தியடையக்கூடிய இயல்புகளும் உள்ளவரை நான் இதுவரையில் சந்தித்ததில்லை. ஜெர்மன் பல்கலைக் கழகங்களிலும் கூட வேதாந்தம் பயிலும் மாணவரிடையே இத்தகையவரைச் சந்தித்ததில்லை. அவர் வாழ்வில் மேன்மையுறுவது திண்ணம்" என்று அவர் கூறுவார்.

நரேந்திரர் படித்த பாடசாலையில் ஆசிரியர் ஒருவர் மாணவர்களை நையப்புடைக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். ஒருநாள் அவர் மாணவனொருவனை அடித்தபொழுது நரேந்திரநாதர் வெறுப்புற்றவராய்ச் சிரித்தார். உடனே ஆசிரியர் நரேந்திரரை அடிக்கலானார். காதைப்

பிடித்துத் தூக்கவும் காதினின்றும் இரத்தமும் வடியலாயிற்று. நரேந்திரர் கோபம் கொண்டவராய் "காதை இழுக்காதீர்கள். என்னை ஏன் அடிக்கவேண்டும்? என்னைத் தொடாதீர்கள்" என்று கூவினார். அச்சமயம் நல்லவேளையாகப் பாடசாலையின் அதிகாரி அங்கு வரவும் நரேந்திரநாதர் அவரிடம் விஷயங்களை யெல்லாம் கூறிப் பாடசாலையை விட்டுப் போவதாகக் கூறினார். அவ்வதிகாரி நரேந்திரநாதரைச் சமாதானப்படுத்தினார். பின்னால் அப்பாடசாலையில் இம்மாதிரியான சம்பவங்கள் நடைபெறாதிருக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மேலே கூறிய சம்பவங்கள் ஆசிரியருக்கு ஊட்டும் படிப்பினைகள் பல. ஆசிரியர்கள் மேலோர், மாணவர் தாழ்ந்தோர் என்ற எண்ணம் கூடாது. அறியாமை எனும் மயக்கத்தைத் தெளியவைக்கும் வேலையில் ஆசிரியர், மாணவர் இருவரும் ஒத்துழைக்கின்றனர். ஆசிரியரின்றிக் கல்வியில்லை. மாணவரின்றிப் போதனை இல்லை. போதனையில்லாவிடில் ஆசிரியன இல்லை. ஆதலால் தான் பண்டைய வேதங்களை அத்தியயனம் செய்யும்பொழுது ஆசிரியரும் மாணவர்களும் கூடி இப்பிரார்த்தனையைச் செய்வது வழக்கமாகும்:

"நம்மிருவரையும் பிர்ம்மன் காப்பாற்றட்டும். நம்மிருவரையும் இரக்ஷிக்கட்டும். பெரும் வீரத்துடன் நாமிருவரும் வேலை செய்வோமாக. நம்முடைய கல்வியானது நம்மிருவருக்கும் ஒளி தருவதாகுக. நம்மிருவரும் ஒருவரை மற்றவர் பகைக்காமலிருப்போயாக!"

ஆசிரிய—மாணவ ஐக்கிய பாவனையே கல்விக்குச் சிறந்த அஸ்திவாரமாகும். அந்தப்பாவனை நம்நாட்டில் வளர்வதாகுக!

## EXTRACTS FROM FORT ST. GEORGE GAZETTE (PART I-B.)

### Amendments to rules relating to Provident Fund for Teachers in non-pensionable service.

(*G. O. No. 1375, Education, dated 28—9—1942*).

No. 179.

The following amendments to the rules relating to the Provident Fund for teachers in non-pensionable service are published :—

**Amendments**

1. The note under rule 9 (*a*) shall be deleted.

2. After rule 9 (*b*), the following note shall be added, namely :—

" *Note.*—Subscribers are also permitted as a temporary measure to utilize the amounts at their credit in the Post Office Savings Bank Account, up to the maximum permissible under the Defence Savings Certificate Rules, following the procedure laid down in rule 9 (*b*)."

(*Gazette page 630, dated 6—10—1942*).

# தாய்மொழி கற்பித்தல்

M. Subramaniam, *L. M. C. High School, Shiyali.*

## XV. செய்யுள் கற்பித்தல்—நீதிச் செய்யுட்கள்

### வாழ்க்கை லக்ஷியமும் கல்வி முறையும்

மனித வாழ்க்கையின் லக்ஷியத்தைக் குறித்துப் பற்பல அபிப்பிராயங்கள் இருந்துவருகின்றன. ஒரு நாட்டினரின் லக்ஷியம் மற்றொரு நாட்டினருக்குப் பிடிக்காது. கண்டதே உண்மை என்றும், உண்டு, உடுத்து, உறங்குவதே, வாழ்க்கையின் பயன் என்றும், நினைத்து வரும் லோகாயமதவாதிகளும் உண்டு. தெய்வீக சம்பந்தமான சின்னங்களைக் கண்டாலும், தெய்வீகத்தை நினைப்பூட்டும் ஸ்தாபனங்களைப் பார்த்தாலும், தெய்வீகத்தில் ஈடுபடுத்தும் ஒழுக்கமுறைக் கருத்துக்களை விளக்கும் நூற்களைக் கேட்டாலும், இத்தகையோர்கள் அலக்ஷியமாகவே இருப்பார்கள். சிலர் வியாபாரத்தையே பெரிதென மதித்து அதற்குத் தக்கவாறு கல்வியை கற்பதுண்டு. கைத்தொழில், வேளாண்மை, முதலியனவெல்லாம் ஒரு நாட்டின் செல்வ விருத்திக்கும், சுபிக்ஷத்திற்கும் காரணமானவை என்று அறிந்து சில நாட்டினர் அவற்றை விருத்தியாக்குவதற்கு வேண்டிய முறையில் தங்கள் கல்வித்திட்டங்களை வகுத்திருக்கின்றார்கள். மற்றும் சிலர் உலகத்தை எவ்விதத்தாலாகிலும் வென்று அரசுரிமை நடத்திப் பிறமக்களை மாக்களென கருதி வருகின்றார்கள். இந்த நோக்கத்தைத் தங்கள் கல்விமுறை அநுஷ்டானத்தில் வெளியாக்கி இருக்கின்றார்கள்.

### இதன் பயன்

இக்கொள்கையை மேற்கொண்டு ஒழுகும் நாட்டினர் தீராத அல்லலில் ஆழ்ந்து கிடக்கின்றனர். உலகசம்பத்தைத் தேட விரும்பிய நாட்டினரின் கல்வி நோக்கம் குறுகியபான்மை பெற்றிருப்பதோடு நாட்டினர்க்குள், பொச்சாப்பு, போட்டி, பொறாமை சுயநலம், முதலிய துர்க்குணங்களும் உண்டாகி, மனிதர்க்குரிய "மானுடம்" அல்லது "மனுஷத்துவம்" என்னும் குணம் கொஞ்சம் கொஞ்சமாக விலகிப் போய், மிருககுணம் அதிகரிக்கிறது. இதனால், கொலை, களவு, அநீதிச் செயல், பொய், வஞ்சகம் முதலியன மேலிட்டு, சமூக சாந்தம் சீர்குலைந்து மனிதவாழ்க்கையின் உன்னத லக்ஷியமும் குன்றிவருகின்றது. ஒரு நாட்டினரே சுகத்தோடு வாழவேண்டும், ஒரு வர்க்கத்தினரே அதிகாரத்தைச் செலுத்தவேண்டும், என்னும் கொள்கை, எப்பொழுதும், கிளர்ச்சி, அதிருப்தி, குழப்பம், என்பவைதை விளைவிக்கின்றது.

## பண்டைக்காலத்துத் தமிழ் நூல்கள்

நம்நாட்டுத் தமிழ் நூற்கள் ஒரே லக்ஷியத்தைக் கைக்கொண்டன. தெய்வம் உண்டு, சமூக ஒழுக்கத்தினாலும் பெரிய அறச்செயல்களாலும், நீதிநெறியில் நடப்பதாலும், தூய்மையான உள் அன்பாலும், தெய்வத்தை வழிபடலாம் என்று அவை கலை இன்ப வாயிலாகப் போதிக்கின்றன. மனிதர்களுடைய உள்ளப்பான்மை சீர் அடைந்தால் எல்லாம் சரியாக இருக்கும் என்பது அவர்களுடைய கொள்கை. ஒருவன் "ஈட்டும் பொருள் முயற்சி எண்ணிறந்தனவாயினும்" பிறர்க்குதவி செய்யாப் பெருஞ்செல்வம் எப்படியாகிலும் போய்விடும் என்பதும் அவரது கொள்கை. எனவே வாழ்க்கையின் உயர்ந்த லக்ஷியமாகிய ஒழுக்கத்தையே சிறப்பாகக் கருதிய நம்நாட்டுப் பெரிய கவிஞர்கள், சிறுவர்களுக்கென அநேக நீதிநூற்களை இயற்றுவித்து, அவர்களது உள்ளத்தை முதலிலிருந்தே நல்ல வழியைப்பற்றுமாறு செய்வித்திருக்கின்றனர்.

## சிறுவர்களுக்கென நீதிச்செய்யுட்கள்

சிறுவர்கள் அறிந்துகொள்ளக்கூடிய நீதிகளை, அவர்கள் அனுபவத்தை யொட்டி, அதிவீரராம பாண்டியர், ஔவையார், சிவப்பிரகாசர், கபிலர், நல்லாதனார், குமரகுருபரர் முதலியோர்கள் அழகான செய்யுட்களை இயற்றியுள்ளார்கள். வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி, நீதிவெண்பா, நன்னெறி, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, நீதிநெறி விளக்கம், இன்னிசை இருநூறு, விவேகசிந்தாமணி, திரிகடுகம், நான் மணிக்கடிகை, சிறு பஞ்சமூலம், முதலியனவும்; திருவேங்கட சதகம், தண்டலையார் சதகம், அறப்பளீச்சுர சதகம், குமரேசசதகம், மணவாள மாமுனி சதகம், முதலிய சதக நூற்களும், வெகு அழகாகவும் எளிய நடையுள்ளனவாகவும், நல்ல நீதிகள் பொருந்திருப்பனவாகவும், எழுதப் பெற்று இருக்கின்றன. சிறிய பெண்பிள்ளைகளுக்குரிய, ஊஞ்சல், அம்மானை, குறம், முதலிய நூற்களும் நம் தமிழ்மொழியில் அதிகமாக இருக்கின்றன. மீனாக்ஷியம்மன் குறம், திருக்குற்றாலக் குறவஞ்சி, அல்லி அரசாணிமாலை, புலந்திரன் களவுமாலை, திரௌபதியம்மன் திருமணம், முதலியனவும், தூது, கிளிக்கண்ணி, தாலாட்டு, ஆகிய இவைகளும் தமிழில் நிரம்ப இருக்கின்றன. இந்த நூற்களின் நோக்கம் எல்லாம், படித்தோர்க்குக் கலை இன்பத்தைத் தருவதோடு அவர்களை நீதிவழியிலும் புகுத்துவதுமாம். முதன்முதல் அதிவீரராமபாண்டியர் வெற்றிவேற்கையிலிருந்து ஒரு பாகத்தைப் பார்ப்போம்.

## வெற்றிவேற்கை

வேலாயுதம் பண்டைக்காலத்தில் உபயோகித்து வந்த ஒரு விசேஷ யுத்தக்கருவி. இதைக் கையிலேந்தியவர்கள் இருவிதத்தில்

தைரியம் கொள்வார்கள். இது முருகபிரானுடைய ஆயுதமாகையாலும், இதைப்பற்றிய தூய்மையும், வலிமையும் அதிகமாகப் போற்றப்பட்டு இருப்பதாலும், இதை உபயோகிப்போருடைய மனம் அதிக பலம் அடைந்து போரில் வெற்றிபெற்றிருக்கும் விசேஷத்தன்மை இவ்வாயுதத்தில் மறைந்திருந்து, அது போர்ச்சேவகனுக்கு உதவுவதுபோல் வெற்றிவேற்கை என்னும் நீதிநூலும் பிரயோஜனப்படுகிறது. இந்நூலைப் பாலபருவத்தில் கற்போர்களுடைய மனவலிமையும் விருத்தியடைந்து ஒழுக்கநெறியும் செம்மையாகிறது. மேலும் இந்நூலில் உயர்ந்த உண்மைப்பொருட்கள் உபமானங்களில் அடங்கி இருக்கின்றனவென்பதைக் காண கீழ்க்கண்ட சிலவரிகளைப் பார்ப்போம்.

“தேம்படுபனையின் திரள் பழத்தொருவிதை
வானுறஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க்கிருக்க நிழலாகாதே.
தெள்ளிய ஆலின் சிறுபழத்தொருவிதை
தெண்ணீர்க்கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதேயாயினும் அண்ணல் யானை
அணிதேர்புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க்கிருக்க நிழலாகும்மே.”

பனை, ஆல் ஆகிய இவ்விரண்டும் மர இனத்தைச் சேர்ந்தனவாகிலும், அயர்ந்து களைத்து அவற்றின் அருகில் வருவோர்களுக்கு நிழல்தரும் உபயோக குணத்தைப் பார்க்கும்போது, ஆலமரமே விசேஷமாக இருக்கிறது. இந்தக்கருத்தை எவ்வளவுக்கெவ்வளவு அழுத்திக் கூறவேண்டுமோ அவ்வளவுக்கவ்வளவு உபமானங்களை வேற்றுமைப் படுத்திக்காட்டி இருக்கின்றார் கவிஞர், அடைமொழிகளும் அவ்வாறே அமைந்திருக்கின்றன. அவற்றை நினைக்கும்போது நம் கற்பனையும் அதிகமாகின்றது. இவை விசேஷ கருத்துக்களையும் குறிப்பிட்டுக் காட்டுகின்றன. இவ்விரு உபமானங்களும் வெகு சாதாரணமானவை. இம்மரங்களைச் சிறுபிள்ளைகள் பன்முறை கண்டிருப்பார்கள், ஆனல் அவற்றைக் குறித்து சிந்தித்திருக்கமாட்டார்கள். மேலும் இச்செய்யுளில் புலவர் நீதிப்பொருளை இன்னதென்று திட்டமாக எடுத்துக்காட்டவில்லை. ஆனல் அதை உபமானத்தில் அடக்கி இருக்கிறார். அன்றியும் ஒருவர் தங்கி இருப்பதற்கு நிழல்தராத பனை, வெகு வளமாக ஓங்கி வளர்ந்திருப்பதை, மன்னரும் அவர் பரிவாரங்களும் படைகளும் வெகு தாராளமாகத் தங்கி இருக்க நிழல்தரும் ஆலமரத்திற்கு ஒப்பிட்டுக்காட்டும்போது பல நீதிகள் புலப்படுகின்றன. இவற்றை எல்லாம் ஆசிரியர்கள் தங்கள் மனத்தில் சிந்தனை செய்து கொள்ளவேண்டும். உபமானத்தில் அடங்கிய கருத்துக்களையும் திட்டமாக அமைத்துக் கொள்ளவேண்டும்.

### குறிப்பான விஷயம்

இச்செய்யுளில் குறிப்பாக (1) விதையின் தன்மை. (2) நிழலின் தன்மை (3) உபயோகம். (4) நீதிப்பொருள் ஆகிய இவற்றைக் காட்டலாம். பனம்பழத்தின் விதை உருண்டு திரண்டு பெரிதாக இருக்கிறது. தின்பதற்கு மதுரமாகவும் இருக்கிறது. இதைக் கண்ணால் காணலாம். கைகளால் எடுத்துப் பந்தைப்போற் அதை உருளவும் செய்யலாம். முகரலாம் நாவினால் ருசிபார்க்கலாம். மேலும், "தேம்படு" என்பதனால் இனிய கள்ளை உண்டாக்கும் என்னும் பொருளும் தொனிக்கிறது. நிற்க, ஆலின் விதையோ மிகச்சிறியது. கயத்தில் வசிக்கும் சாதாரண சிறுமீன் முட்டைகளைப் பார்க்கிலும் மிகச்சிறியது. அதைப் பார்க்கவும் முடியாது. இவ்விதைகள் பழத்தோடு கலந்தே இருக்கும். இவற்றைப் பொறுக்கி எடுக்கமுடியாது. உலர்ந்தபிறகு தெள்ளித்தான் எடுக்க வேண்டும். எனவே விதைகளின் நுண்ணிய தன்மையைக் கூறினார் ஆசிரியர். பனை ஆகாயத்தை நோக்கி ஓங்கிவளரும். ஆனால் ஆலமரமோ, பல கிளைகளுடன் தழைத்து இருக்கும். பனை ஒருவர்க்கிருக்க நிழல் காராது. ஆலமரம், நான்கு பெரும்படைகளுடைய மன்னர்க்கிருக்க நிழல்தரும். உலகத்தில் விசேஷ உபயோகம் தரும்பொருட்கள் மிகச் சிறியதாக இருக்கும். வெகு சட்ட திட்டமாக தங்கள் பிரதாபத்தை பிறருக்கு வெகு பெருமையுடன் கூறிக்கொண்டு இருப்பவர்கள் தக்க சமயத்தில் ஒரு சிறு உதவியை ஒருவனுக்கும் செய்யார்கள். உருவத்தில் பெரிதாக இருப்பவைகள் பலனில் குறைவாக இருக்கும். ஒருவருக்கும் தெரியாத மிக எளிமைத்தன்மையில் இருப்போர்கள் மாபெரும் உதவியைச் செய்யக்கூடும். இராமாயணத்தில் குகன் அப்படியே. ஆகையால்தான் திருவள்ளுவ நாயனாரும், "பனையளவு" "தினையளவு" என்கின்றார்.

### கரும்பலகையில் எழுதவேண்டியவை

(1) பனை. தேம்படு—பனை திரள்—பழம். வானுற—வளர்தல். வளம்பெற—வளர்தல். ஓங்கிவளர்தல். (2) ஆலமரம். தெள்ளிய—ஆல். சிறு—பழம், ஒரு—விதை. தெள்—நீர்க்கயம். சிறு—மீன்—சினை. நுண்ணிய—விதை. அண்ணல்—யானை. அலி—தேர். அணி—புரவி. பெரும்—ஆள்—படை. இந்த அடைமொழிச் சொற்களைக் கொண்டு ஒரு சிறு சம்பாஷணையும் செய்யலாம். கடைசியில், இதை விளக்க ஒரு படம் எழுதிக்காட்டலாம்.

### சிறுவர்களுக்கான ஔவையாரின் செய்யுள்

சிறுவர்கள் சீர்படவே ஔவை பிராட்டியார் செய்யுள் இயற்றி இருக்கின்றனர். ஔவையாரின் செய்யுட்கள், படிக்க எளியனவாகவும், உண்மை, நீதி, கற்பனை முதலிய பொருட்கள் நிறைந்தனவாகவும், இருப்பதோடு சிறு பிள்ளைகளின் மனத்தைக் கவர்ந்திருபதற்குத் தக்கப்

வாறு அழகான உபமானங்களும் அவற்றில் இருக்கின்றன. மேலும் இவை பிள்ளைகளின் மனத்தன்மை விருத்திக்குத் தக்கவாறும் அமைந் திருக்கின்றன. (1) ஒன்றுக்கு மேல்பட்ட உபமானங்கள் நிறைந்தன வாகவும், குறித்த ஒரு கதைப்பொருள் அல்லது நீதிப்பொருள் விளக்கு வனவாகவும் சில செய்யுட்கள் இருக்கின்றன. இவை நான்காம் அல்லது ஐந்தாம் வகுப்புப் பிள்ளைகளுக்குத் தகுதியாக இருக்கும், உதாரணமாக.

(1) மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம் (2) வேங்கைவரி புலிநோய் தீர்த்த விடதாரி. (3) கவையாகிக் கொம்பாகிக் காட்ட கத்தே நிற்கும் மரங்கள், என்னும் செய்யுட்களில், கதைப்பொருளும், விசேஷ நீதிப்பொருளும், இவற்றைச்சுட்டி விளக்கிக் காட்டுவதற்கான இயற்கை வருணனைகளும், அடங்கி இருக்கின்றன. தவிர சிறுவர்க ளுடைய ஆவல், உற்சாகம் முதலியவற்றைத் தூண்டிவிட அவர்களுக்கு விருப்பமான பல இயற்கைப் பொருட்களும் இச்செய்யுட்களில் அடங்கி இருக்கின்றன. கிராம வாழ்க்கையின் மேன்மையை விளக்கிக்காட்டி அங்குள்ள இயற்கைப் பொருட்களையும் அதிகமாக இச்செய்யுட்களில் வருணித்துக் கூறுகின்றார் ஔவையார்.

நீராம்பல் அல்லி, தாமரை, வாடி இருக்கும் கொக்கு, நண்டு உயர்ந்த வரப்பு, நெற்பயிர், ஓடும்மீன், பழுத்தமரத்தை நோக்கிச் செல்லும் வௌவால், பூக்காமல் காய்க்கும் அத்தி, மெல்லியவாழை, நல்ல தாமரைக் கயம், அன்னப்பறவை, நாகப்பாம்பு, நீர்ப்பாம்பு, கோட்டி, வறண்டகுளம், கானமயில், வான்கோழி, நீர்ஊற்று, நெற்கட்டு, முதலியனவெல்லாம் போதுமான சான்றாகும். இவை வெகு அழகாக இருப்பதோடு கிராமச் சூழ்புற பொருட்களை நம் நினைவுக்குக் கொண்டுவருகின்றன.

(2) உயர்ந்த நீதிகள்

இவற்றில் உண்மைப்பொருட்கள் அதிகமாகவும், உபமானங்களை ஒருவன் எளிதில் அறிந்து கொள்ளக்கூடியதன்மை அதிகம் இல்லாமலும் இருக்கின்றன.

உதாரணமாக. (a) கற்பிளவோடு ஒப்பர் கயவர். (b) செய் தீவினை இருக்கத் தெய்வத்தை நொந்தக்கால் (c) ஆனமுதலில் அதிகம் செலவானால், (d) வருந்தி அழைத்தாலும் வாராததுவாரா, (e) உடன் பிறந்தார் சுற்றத்தார். முதலியனவெல்லாம் கொஞ்சம் கடினமானவை.

ஆசிரியர் கவனிக்க வேண்டியவை

(1) இசைப்பொருள். ஒரு செய்யுளை இராகத்தோடு வாசித்தால் அது மனத்திற்குச் சந்தோஷம் தருவதோடு பொருளும் பதிகின்றது. ஔவையார் எழுதிய செய்யுட்கள் பெரும்பாலும் வெண்பா இனத் தையே சேர்ந்தன. இதைச் சாதாரணமாக சங்கராபரண இராகத்தில் பாடலாம். பின்பு பிள்ளைகளை வாசிக்கச்செய்யலாம்.

(2) சம்பாஷணை. செய்யுளில் அடங்கிய கருத்துக்களைக்கொண்டு பிள்ளைகளுடன் ஆசிரியர் சம்பாஷணை செய்யவேண்டும், கூடியவரையில் சம்பாஷணை பிள்ளைகளின் அனுபவத்தை ஒட்டி இருக்கவேண்டும், வேண்டுமானால் செய்யுளில் அடங்கிய சொற்களையும், சொற்றொடர்களையும் சம்பாஷணையில் உபயோகிக்கலாம்.

(3) விளக்கவேண்டியவை. உபமானங்களை நன்றாக விளக்கிக் காட்டினால் உபமேயம் விளங்கிவிடும். அனாவசியமாக உபமானத்தைப் பெருக்கிக் காட்டக்கூடாது. இப்படிச் செய்வதால் விபரீத அர்த்தம் உண்டாகும்.

(4) கதைக்குறிப்புக்கள். நீதிப்பொருட்களை நன்றாக பிள்ளைகள் அறிந்துகொள்ள ஒரு கதை சொல்லவேண்டும். இக்கதை, இலக்கியம், புராணம், இதிகாசம், முதலியவற்றிலிருந்து பொறுக்கி எடுத்திருந்தால் நலமாகும்.

(5) அனுபவத்தோடு இணைத்தல். சில பிள்ளைகளுக்குச் செய்யுட்களில் அடங்கி இருக்கும் கருத்துக்களை உணர்த்தும்படி செய்யலாம் "நீக்கம் அறு இருவர்" என்னும் செய்யுள் நீதி பிள்ளைகளுக்குத் தெரியும். சிறுவர்களில் சிலர் சினேகிதர்களாக இருந்து ஏதோ சில காரணங்களால் பிரிந்து சேருவதுமுண்டு. இது வகுப்பு மாணவர்களுக்குள் சகஜம், இதை அவர்களுக்கு நினைப்பு வூட்டலாம்.

(6) கலைப்பொருள். அழகான வருணனை எவ்வித சொற்களால் விளக்கப்பட்டு இருக்கின்றன என்பதையும், சொற்களின் நிலை எப்படி இருக்கின்றன என்பதையும், செய்யுளைப் படித்துக்காட்டி விளக்கலாம்.

(தொடரும்)

# மாணவர்களது ஆரோக்கியம்

## கல்வி ஸ்தாபனங்கள் கையாளவேண்டிய முறைகள்

இந்தக் காலத்தில் ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கல்வி பயிலப் படுகிறது என்று சென்னை "ஹெல்த்" பத்திரிகை தனது தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது. மாணவரும், உபாத்தியாயரும் அல்லது பண்டிதரும் பரீட்சையில் ஜெயிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கின்றனரே யன்றி அவர்களது ஆரோக்கியம் குறைவுறுதிருப்பதில் கவனம் செலுத்துவதில்லை. இதனால் ஏற்பட்ட தீங்குகளையும், இதைச் சீர்ப்படுத்துவதற்குரிய வழிகளையும் பற்றி மேற்படி பத்திரிகை வரைந்திருப்பதன் சாரம் வருமாறு:—

கல்வித் திட்டத்தில் ஏற்பட்டுள்ள சில குறைபாடுகளே மாணவரின் ஆரோக்கியம் குறைந்து போவதற்குக் காரணமாயிருக்கின்றன. மற்றவர்களைவிடக் காலேஜ் மாணவர்கள் ராணுவ சேவைக்குக் குறைந்த அளவிலேயே தகுதியுடையவர்களாகக் காணப்படுகிறார்கள் என இத்துறையில் ஆராய்ச்சி செய்தவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகவே, கல்விப் பயிற்சி முறையிலுள்ள குறைபாடுகள் நீக்கப்படுவது மட்டுமின்றி, மாணவர்களுடையவும் ஆசிரியர்களுடையவும் பொதுவான ஆரோக்கிய நிலையை அபிவிருத்தி செய்தற்கும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

பல்வேறு குறைபாடுகளிலும், மிக எளிதாகச் சரிப்படுத்தத் தக்கது கல்வி ஸ்தாபனங்களின் வேலை நேரங்களை ஒழுங்குபடுத்துவது தான். பூரணமான ஆகாரம் எடுப்பதற்கு மிகச் சிறந்த நேரம் மத்தியானம் தான் என்பது வைத்திய நிபுணர்கள் எல்லோரும் ஒரு மனதாக ஒப்புக்கொண்ட விஷயம். ஆனால் மாணவர்கட்கு இது ஒழுங்காகக் கிடைப்பதில்லை. ஆரோக்கிய விஷயத்தில் மாணவர்களே முதன்மையாகக் கவனிக்கப்படத்தக்கவர். இதன் பலன் என்ன? சாதாரணமாக மாணவன் மத்தியானம் பூரணமான ஆகாரம் சாப்பிடுவதற்குப் பதில் பலகாரமே சாப்பிடுவதை விரும்புகின்றான். பலகாரம் சாப்பாட்டை விட அதிகப்படிச் செலவு பிடிப்பது தான்; ஆனால், போஷணைச் சத்தோ குறைவாக உள்ளது. அது மட்டுமல்ல; பின்காலத்தில் அது ஒரு பழக்கமாக ஏற்பட்டு விடவும் காரணமாகின்றது. ஆனால் மத்தியானம் பூரணமான சாப்பாடு சாப்பிடுவதென்றால், காலையில் சிற்றுண்டி,

மத்தியானம் பூரணமான சாப்பாடு, பிற்பகல் பால், இரவில் இராச் சாப்பாடு என்ற முறை ஏற்பட்டுவிடும். மத்தியானம் சில மணிநேர சாவகாசத்துடன் காலையிலும் மாலையிலுமாக ஏன் பள்ளிக்கூடங்களும் காலேஜ்களும் நடத்தப்படக் கூடாதென்பதற்குப் பலத்த காரணம் எதுவுமில்லை.

இரண்டாவது குறை யென்னவென்றால், மாணவர்கள் அதிகமாக வாசிப்பதும் குறைவாக வேலை செய்வதுந்தான். படிக்கும் விஷயங்கள் அனந்தம்; அவை பல்வேறு பிரிவுபட்டிருப்பதால், மாணவன் தனது சிரத்தையையும் சிந்தையையும் சிதறடிக்கின்றான். இவை அவனுக்குக் கவலையையும் தருகின்றன. ஆனால் ஒரு பத்து வயதுச் சிறுவன் தனது பிராயங் காரணமாக இளமைப் பருவத்தில் இதை உணர்வதில்லை. இந்தப் பாடங்களைப் படிப்பது ஒரு பயிற்சியாகத் தோன்றாமல் ஒரு போராட்டமாகவே படுகிறது. வேலை செய்யும் நேரம் பகலிலிருந்து இரவுக்கும் செல்கிறது; அதுவும் கண்டிப்பாகப் படித்தாகவேண்டு மென்ற கண்டிப்புணர்ச்சியுடன், படிப்பதற்கு மிகச் சரியான நேரம் காலைதான். அந்தச் சமயந்தான் படிப்பதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும். பிற்பகல் நேரம் "வீட்டு பாட"த்துக்காக உபயோகிக்கப் படவேண்டும். "வீட்டுப்பாட" வேலை வீட்டிலில்லாமல் பள்ளிக் கூடத்திலேயே செய்யப்படவேண்டும். இரவு நேரம் தூங்குவதற்காக விட்டுவிடப்பட வேண்டும். முன்னிரவில் தூங்குவதே பின்னிரவில் தூங்குவதைவிட மேல். காலை 6-30 அல்லது 7 முதல் 11 வரை பள்ளிக்கூடங்களில் வேலை நடக்கவேண்டும். இதனால் மாணவர்களும் ஆசிரியர்களும் காலை 4 மணிக்கே எழுந்திருக்கும் பழக்கத்தைக் கைக் கொள்ளும் பயிற்சி ஏற்படும். இதனால் எத்தனையோ கெடுதல்கள் நிவர்த்தியாகும்.

ஹைஸ்கூல்களிலும் காலேஜ்களிலும் மாணவர்க்கு முதல் விரோதியாயிருப்பது தவறான படிப்பு நேரந்தான்.

ஒவ்வொரு கல்வி ஸ்தாபனத்திலும் ஒரு தோட்ட மிருக்கவேண்டும். மாணவர்கள் சென்று குழுவினராக ஒவ்வொரு பகுதியாகக் கவனித்துக் கொள்ளும்படி விடவேண்டும். தினமும் மாலையில் விளையாட்டுடன், குறைந்தது 40 நிமிஷ நேரமாவது இந்தத் தோட்டத்தில் மாணவர்கள் வேலை செய்யவேண்டும். செடி வளர்த்தல், உரம் போடுதல் முதலிய விஷயங்களும் கற்பிக்கப்பட வேண்டும். தோட்டம் தினசரி உபயோகத்துக்கான காய் கறி, புஷ்பங்களைக் கொடுப்பதாக இருக்கவேண்டும். இதனால் கொஞ்சம் வருமானமும் கிடைக்கலாம். இதில் ஆண், பெண், சாதி முதலிய வித்தியாசங்கள் பாவிக்கப்படக் கூடாது. இதனால் மாணவரது ஆரோக்கியக் கோளாறு நீங்குவது

மட்டுமின்றி அவர்களது ஆரோக்கியம் அபிவிருத்தியடையவும் ஏதுவாகும். ஆசிரியர்களும் தோட்ட வேலையில் மாணவர்களுடன் கலந்து பழகவேண்டும்.

ஒவ்வொரு ஹைஸ்கூலிலும் காலேஜிலும் வைத்தியசாலை ஒன்று ஒரு டாக்டரது மேற்பார்வையில் அவசியம் இருத்தல் வேண்டும். ஆரோக்கிய விஷயத்தில் இந்த டாக்டர் மாணவர்கட்குப் போதிக்க வேண்டும். விளையாட்டுகட்காகக் கொடுக்கப்படும் கட்டணத்தில் ஒரு பகுதி இது வகைக்காக ஒதுக்கப்பட வேண்டும். பிற்பகலில் மாணவர்க்குக் கட்டாய முறையில் பால் கொடுக்கும் முறையை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். டாக்டர் ஒவ்வொரு மாணவரையும் பரிசோதனை செய்து அவரவர் ஆரோக்கியத்துக் கேற்ற உணவு முதலியவற்றைத் தெரிவிக்கவேண்டும். அவர்கட்கு நோய்வராது தடுக்கும் முறைகளைக் கற்பிக்க வேண்டும்.

இந்த யோசனைகளைக் கல்வி ஸ்தாபனங்களும் ஏற்றுக்கொண்டால், மாணவர்களது ஆரோக்கியம் அதிகப்படி அபிவிருத்தி யடையும் என உறுதி சொல்லலாம்.

—குமரன்.


## திருச்சி ஜில்லா ஆசிரியர் சங்கப் பதிப்பு

★ ஆரம்ப ஆசிரியர் பாடதிட்ட மொழி பெயர்ப்பும் விமர்சனமும்

★ ஆரம்பக் கல்வி விதி விளக்கம்

★ உபாத்தியாயர்கள் கைப்புத்தகம்
(200 பக்கங்கள் அடங்கியது)

விலை ரூ. 0—8—0. (தபால் செலவு பிரத்தியேகம்)

—: வேண்டுபவர்கள் :—

**ஸ்ரீ S. T. ராமானுஜ அய்யங்கார்**


ஸ்வாமிநாத பவன் :: ஸ்ரீரங்கம்

—: என்ற விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும் :—

# கலையும் கைத்தொழிலும்—XIV

(R. M. Savur, M. A. (*Cantab*).,
(*Divisional Inspector of Schools, Coimbatore.*)

[குறிப்பு :—இதற்கு முந்திய கட்டுரையில் ஒரு தவறு ஏற்பட்டதற்கு நான் வருந்துகிறேன். அது என்னுடைய குற்றமே : அக்கட்டுரையிலுள்ள படத்தில் எது மேல்புறம் என்று குறிக்க நான் தவறிவிட்டேன். அந்தப் படம் சரியானபடி கீழே காட்டப்பட்டிருக்கிறது.]



## வார் தையலின் விஸ்தரிப்பு

அழகு படுத்த வேண்டிய வஸ்துவின்மேல் சமதூரத்தில் பல கீறுகள் செய்து அதே அகலமுள்ள சரிகைத் துண்டுகளை மேலும் கீழுமாகச் சொருகி ஒருவித சட்டம் மாதிரியாகச் செய்யலாம். பலவித வர்ணமுள்ள சரிகைகளை உபயோகித்து பலவிதமான கட்டங்கள் உண்டாக்கலாம். வர்ணக் காகிதங்களைக்கொண்டு சிறுவயதில் நாம் பாய் மாதிரி பின்னியதுபோல அழகுபடுத்துவது சுலபமானது.


கீழே காட்டியுள்ளது ஒரு பை. அதில் குறுக்காகப் பல கீறுகள் செய்யப்பட்டிருக்கின்றன. பக்கங்களில் சில சிறிய கீறுகளே செய்யப் பட்டிருக்கின்றன. சாதாரணமாக இதைப்போல் ஒரு பை செய்ய வேண்டுமானால் பையின் மேல் புறத்தில் கீறவேண்டிய இடங்களை முதலில் கோடுகளால் அடையாளம் செய்துகொள்ள வேண்டும். முன்புறத்திற்கும் பின் புறத்திற்கும் கறுப்புத்தோலும், சரிகைக்கு வெள்ளைத்தோலும் உபயோகிக்கலாம்.

## அடையாளம் செய்வது

முடிவடைந்த பிறகு பையின் உட்புறத்தில் இருக்கும்படியான பக்கத்தில் நாலுபக்கமும் $1\frac{1}{2}$ அங்குலம் விட்டு படத்தில் காட்டியிருப்பது போல் அடையாளம் செய்து கொள்ளவேண்டும். புள்ளிக்கோடுகளை வெட்டாமல் முழுக்கோடுகளை மட்டும்தான் கீறவேண்டும்.

முதலில் பக்கத்துக்கோடுகளில் மேலிருந்து கீழாக A முதல் K வரையில் கீறல் செய்ய வேண்டும். அவைகளை பின்வருமாறு செய்ய வேண்டும்:—

அரை அங்குல நீளமுள்ள கீறலை மேலிருந்து கீழாக A என்ற இடத்தில் செய்யவேண்டும். பிறகு அரை அங்குலம் வெட்டாமல் விட்டு மறுபடி C என்ற இடத்தில் அரை அங்குல நீளம் கீற வேண்டும். இதேமாதிரி சம தூரத்தில் விட்டு விட்டுக் கீறவேண்டும். இப்படியாக பக்கக்கோடுகளில் ஆறு கீறல்கள் A, C, E, G, I, K. என்ற இடங்களில் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்குப் பிறகு, அரை அங்குல இடைவெளி விட்டு மேலிருந்து கீழாக நீளமான கீறல்களை படத்தில் காட்டி இருப்பது போல் செய்யவேண்டும்.



Front of Bag-Marked out for Cutting

குறுக்குப் பின்னலுக்கு ½ அங்குல அகலமுள்ள 13 வெள்ளைத் தோல் பட்டைகள் வேண்டும்.

## குறுக்குப் பின்னல்

A என்ற இடத்திலுள்ள துவாரத்தின் வழியாக பின்புறத்திலிருந்து முன்புறத்திற்கு ஒரு வெள்ளைத் தோல் பட்டையைக் கொண்டு வரவேண்டும். பிறகு முதல் கறுப்புப்பட்டையின் மேலேயும், பிறகு அடுத்த பட்டையின் அடியிலுமாக மாற்றிக்கொண்டு வந்து எதிர்ப் பக்கத்திலுள்ள A என்ற துவாரத்திற்குள் சொருகி விடவேண்டும். இப்பொழுது கிண்டர் கார்ட்டன் வகுப்பில் செய்யப்படும் காகிதப் பாய் போல் காணப்படும். இப்படிச் செய்வதில் எல்லாத்தோல் சரிகையின் நுனிகளும் தோலின் அடிப்புறத்தில் நீட்டியிருக்கும். இவைகளை அடிப்புறத்திலேயே ஒவ்வொரு ஓரத்திலும் பசையால் ஒட்டவோ அல்லது தைக்கவோ செய்யவேண்டும்.

பையின் முன்பக்கத்தும் பின்பக்கத்தும் தோல்களை ஒன்றுக்கொன்று பொருத்தும்போது உள் பக்கத்தில் வெள்ளைப்பட்டினால் மூட வேண்டும். இதை வெள்ளை வாரினால் தைக்கலாம். பையின் முன் பின் பக்கங்களைத் தைப்பதற்கு முந்தி முன்கட்டுரையில் காட்டியபடி வெள்ளைத் தோலும் கறுப்புத்தோலும் சேர்த்துப் பின்னப்பட்ட கைப்பிடியை பொருத்த வேண்டும். பையின் வாயை Zip-fastener-ஐக் கொண்டு மூடலாம். Zip-fastener-ஐ உபயோகிப்பதானால் பையைத் தைப்பதற்கு முன் இதைத் தைத்துவிட வேண்டும்.

# அனுபவக் கனிகள்

(P. N. Kalyanasundaram, *Headmaster, Board School, Kayapakkam,*)

## 6. கரும்பலகை (Black board)

தற்போது ஆரம்பப் பள்ளிகளில் கரும்பலகைகள் சட்டஞ்செய்யப்படாமல் சுவற்றிலேயே கரும்பலகைகள் பூசப்படுகின்றன. சுவற்றில் பூசப்பெற்ற கரும்பலகைகள் சில பாடசாலைகளில் வகுப்புகள் இருக்கவேண்டிய இடங்களில் பூசப்படாமல் உட்புறச் சுவர்கள் முழுவதும் (ஜன்னல்கள் தவிர்த்து) பூசப்படுகிறது. இஃது சிலசமயங்களில் பாடசாலைக்கட்டிடக் காண்ட்ராக்டர்களின் ஞானேதயமோ—அல்லது கல்வி விதிகளைச்சற்றேனும் அறியாத கொல்லத்துக்காரரின் கைத்திறனே—இவ்வாறு சவர்களில் சுற்றிலும் கருப்புப்பூச்சு பூசப்படுகிறது. ஒருவேளை பார்வைக்கு அழகு, சமதோற்றம் இவைகளைக் கருதி அவ்விதம் பூசுகிறார்கள் போலும். இதை அதிகாரிகளும் ஆமோதித்துவிடுகிறார்கள்.

ஆனால் நடைமுறையில் தினசரிக் கடமையை ஆசிரியர் ஆற்றும்போது—சுவற்றுக் கரும்பலகையினால் சாதகத்திற்குப் பதில் பாதகமே அதிகம் என்று உணர்கிறார்.

ஏனெனில், சிற்சில சமயங்களில் வகுப்புக்களை வேறுஇடத்தில் அமைக்கவேண்டியதாகிறது. அப்போது போதனா விதிகளின்படி கரும்பலகை ஆசிரியரின் இடப்புறத்தே இருத்தல் வேண்டும். ஆனால் வேண்டிய இடத்தில் கரும்பலகை சிற்சில இடங்களில் உதிர்ந்து மங்கியும், வேண்டாத வலப்புறத்தே அழகாயும் இருப்பதால் பாதகம் ஏற்படுகிறது.

இடம்:—கரும்பலகை உள்ள இடம் குழந்தைகளின் எதிர்ப்புறமாயும், யாவரும் அதில் எழுதியதைப் படிக்குமாறும் உயரம், தூரம் உள்ளதாயும் இருத்தல் வேண்டும். சுவற்றில் பூசப்படும் கரும்பலகையை வைத்துக்கொண்டு தலைமையாசிரியர் வகுப்புகளைக் கண்காணிக்கும் முறையில் அமைத்தால் கரும்பலகை குறித்த இடத்தில் அமைவதில்லை. கரும்பலகை உள்ளஇடத்திற்கு ஏற்ப வகுப்புக்களை அமைப்பதில் கல்வி விதிகளின் திட்டம் கைகூடுவதில்லை. இம்மட்டோ, சிறு குழந்தைகளின் தலையில்உள்ள எண்ணெய் சுவற்றில் பட்டு, காலக்கிரமத்தில் பூசப்பெற்ற கரும்பலகையின் அடிப்பாகம் ஏறக்குறைய மூன்றில் ஒருபங்கு பிசுபிசுப்பேறிப் பயனற்றதாகிவிடுகிறது. (இது அனுபவமே யொழிய நடையழகை உத்தேசித்து எழுதப்படவில்லை). சுற்றிலும் சுவர்களில் அதாவது கரும்பலகைகளில்உள்ள அழுக்கை ஒருநாள் சுரண்டி எடுத்ததில் கைவேலைக்குக் 'குட்டியானை' ஒன்று செய்யக்கூடிய அளவு அழுக்குருண்டை கிடைத்தது.

இந்த உண்மைக் கஷ்டத்தைத் தைரியமாகத் தெரிவிக்கும் ஆசிரியருக்குக் கீழ்க்கண்ட ஆசிகள் கிடைக்கலாம், "நீர் குழந்தைகளை சுவற்றில் உராயாதபடி எச்சரிக்கவேண்டும். ஒரு அடி இடைவிட்டு அவர்களை உட்காரவைக்க வேண்டும்"........என்பதே. ஆமாம் அன்பரீர், நான் வந்து மாதம் மூன்றுதானே ஆகிறது இப்பள்ளியின் தலைமையாசிரியர் பதவிக்கு இந்த அழுக்கு வருஷக்கணக்கில் சேர்ந்ததாயிற்றே என்று ஆசிரியன் எதிர்த்து உரையாடலாமா? சொல்லுங்கள்.

ஆகவே உண்மை தெரிந்த கல்வியதிகாரிகளும் மானேஜ்மெண்டாரும் இனிப்பள்ளிச் சுவர்கள் முழுவதும் கரிபூசும் காரியத்தைத் தடுக்கவேண்டும். இச்சுவற்றுக் கரும்பலகைகளால் பாடசாலை அலங்காரத்திற்கும் இடையூறு ஏற்படுகிறது. ஏனெனில், தயாரித்த படங்கள் சார்ட்டுகளை சுவற்றில் மாட்ட கரும்பலகை குறுக்கிடுவதால் அதிக உயரத்தில் தொங்கவிடவேண்டியதாகிறது. உயரத்தில் மாட்டப்பெற்ற சார்ட்டுகள் போதிப்பதற்குச் சாத்தியமற்றதாகின்றன. ஆகவே சுவற்றில் பூசப்பெற்ற கரும்பலகை மொத்தத்தில் பயன் குறைந்ததென்றேயாகும். [தொடரும்]

## ஸ்ரீ சாரதா பாடசாலை, மாம்பலம்

### (a) பாஷா அபிவிருத்தினி சங்கம், (தமிழ்ப்பிரிவு)

26—9—42-ல் ஸ்ரீ ராமகிருஷ்ண ஹைஸ்கூல் ஆசிரியர் ஸ்ரீ ராஜம் அய்யர் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. மாணவ மாணவிகள் 'தர்மம்' என்பதைப்பற்றிப் பேசினார்கள். திறமையாகப்பேசின ஆறுவது வகுப்பு மாணவனுக்குப் பரிசளிக்கப்பட்டது. தலைவர் இப்பாடசாலையின் அலுவல்களைப் பாராட்டிப் பேசினார்.

### (b) பாஷா அபிவிருத்தினி சங்கம் (ஆங்கிலப்பிரிவு)

30—9—42-ல் ஸ்ரீ சாரதா வித்யாலயா டிரெனிங் ஸ்கூல் உபாத்தியாயினி ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி அவர்கள் தலைமையில் கூடியது. மாணவ மாணவிகள் 'My Motherland' என்பதை ஆங்கிலத்தில் செவ்வனே பேசினார்கள். தலைவி அவர்கள் சந்தோஷமடைந்து பள்ளிக்கூடம் மேன்மேலும் விருத்தியடையுமாறு வாழ்த்தினார்கள்.

### (c) காந்தி ஜயந்தி

பாரதி கழகத்தின் ஆதரவில் மகாத்மா காந்தி அவர்களின் 74-வது பிறந்ததினம் கொண்டாடப்பட்டது. தேசீயப்பாட்டுப் போட்டி நடைபெற்று வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டது. குழந்தைகளுக்குச் சர்க்கரை வழங்கப்பட்டு மங்கள கீதத்துடன் முடிவுற்றது.

# செய்தித் திரட்டு

[குறிப்பு:—இத்தலைப்பிற்குள்ள விஷயங்களைத் தமிழிலேயே சுருக்கமாக எழுதி அனுப்பும்படி சந்தாதார்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.]

## இந்து மத பாடசாலை, வாலாஜாபாத்.

4—10—42 அன்று 27-ஆம் தோற்றத் திருநாள் விழா உயர் திரு. பி. டி. ராமன் நாயர் ஐ. ஸி. எஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இப்பாடசாலைக்காக ஆறாயிரம் ரூபாய் மதிப்புள்ள வீட்டை எழுதிவைத்த திரு. வேதவல்லி அம்மையாரை எல்லாரும் போற்றியதோடு அவ்வம்மையாரின் படத்தை ஜில்லா முன்சீப் திரு. இராமச்சந்திர அய்யர் அவர்கள் திறந்து வைத்தார். தலைவர் முடிவுரையில் இப் பாடசாலையைப்பற்றிப் புகழ்ந்து பேசினார்.

## ஜார்ஜ் பாடசாலை, வளவனூர். பெற்றோர் சங்கம்.

13—9—42-ல் இச்சங்கத்தின் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்கள் தலைமை வகித்தார், மாணவர்களால் சங்கீதமும், ஹாஸ்ய நடிப்புகளும், ஆசிரியரால் ஜால வேடிக்கையும் நடைபெற்றன. விழுப்புரம் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் ஸ்ரீ வீ. ஜயராமய்யர் அவர்கள் 'பாடசாலைக் கல்வியும் பெற்றோர் ஒத்துழைப்பும்' என்பதுபற்றி அரியதொரு சொற்பொழிவு செய்தார். தலைவர் முடிவுரையில் பாடசாலைக்கும் குடும்பத்துக்கும் உள்ள சம்பந்தங்களைப்பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்.

## டீச்சர் மானேஜர்கள் யூனியன், விழுப்புரம்.

27—9—42-ல் இந்த யூனியன் கூட்டம் ஒன்று கூடி சில தீர்மானங்களை நிறைவேற்றியது:—

1. திரவிய சகாயம் பெறும் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் பலரின் சம்பளம் கவர்ன்மெண்ட் ஆபீஸ் சேவகனின் சம்பளத்தில் பாதி அளவுகூட இல்லாததாலும், டிப்டி இன்ஸ்பெக்டரின் கண்காணிப்பின் கீழ் வேலை திறமாகச் செய்து வருவதாலும் அவர்களுக்கு அளிக்கும் கிராண்டுத் தொகையை இதர பாடசாலைகளில் ஆசிரியர்கள் பெறும் சம்பளவிகிதங்களுக்குக் குறையாமல் உயர்த்தும்படி டிபார்ட்மெண்டைக் கேட்டுக் கொள்ளுகிறது.

2. கவர்ன்மெண்ட் சிப்பந்திகளுக்குப் பஞ்சப்படி கொடுத்துதவத் தீர்மானித்துள்ளதுபோல் மிகக் குறைந்த ஊதியம் பெற்றுவரும் திரவிய சகாய பாடசாலை ஆசிரியர்களையும் தங்கள் சிப்பந்திகளைப்போல் பாவித்து பஞ்சப்படி கொடுத்துதவும்படி வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறது.

## பழனி தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன், சத்திரப்பட்டி.

27—9—42-ல் ஒரு ஸ்பெஷல் கூட்டம் கூடி தீர்மானித்தது:—

(1) போர்டு ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளம் மிகக் குறைவாயிருப்பதாலும், விலைவாசி உயர்வினால் ஜீவனத்திற்குப் போதாததாலும், அவர்கள் கடனாளிகளாகி வருந்தாமலிருக்கும்படி குறைந்தது சம்பளத்தில் 25 சதவீதம பஞ்சப்படி 1—8—1941 முதலே கொடுத்துதவும்படி ஜில்லா போர்டாரை மிகவும் வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகிறது.

(2) முதல் முதல் நடக்கும் மத்திய ஜில்லா போர்டு ஆசிரியர்கள் கமிட்டி மீட்டிங்குக்கு இந்த யூனியனின் பிரதிநிதிகளாக பிரசிடெண்டும் செகரிடரியும் போவதை ஆமோதித்து அதற்குள்ள செலவையும் அங்கீகரிக்கிறது.

---

## சேலம் சிட்டி முனிசிபல் எலிமெண்டரி டீச்சர்ஸ் யூனியன், சேலம்

20—9—42-ல் பிரசிடெண்டு G. டேவிட் அவர்கள் தலைமையில் மகாசபை கூடி சில தீர்மானங்களை நிறைவேற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்ப உத்தேசித்தது:—

1. முனிசிபல் ஆரம்ப ஆசிரியசங்க சிலபஸ் கமிட்டியால் தயாரிக்கப்பட்ட சிலபஸை இம் மகாசபையின் அபிப்பிராயத்திற்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறது.

2. வகுப்பு உபயோகத்திற்காக எல்லா ஆசிரியர்களுக்கும் வகுப்பு புஸ்தகங்களை சப்ளை செய்யும்படியும்,

3. சர்க்கார் திட்டம்போல் முனிசிபல் ஆரம்ப ஆசிரியர்களுக்கும் யுத்தப்படி கொடுத்துதவும்படியும் கனம் கமிஷனர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

4. உணவுப்பொருள்களின் விலைவாசி கட்டுப்பாட்டை பழைய விலைப்படி திட்டம் செய்யும்படியும்,

5. விஷயங்களை நேரில் தெரிவிக்க 4 பேர் கொண்ட தூது கோஷ்டி செல்வதற்கும்,

6. மண்ணெண்ணையை மாதம் இரண்டு புட்டிகள் போதாததால் ஒரு காலன் சப்ளைக்கு ஏற்பாடு செய்யும்படியும் ஜில்லா கலெக்டர் அவர்களை கனம் கமிஷனர்மூலம் கேட்டுக்கொள்ளுகிறது.

---

## போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை, சங்கரிதுர்க்கம்

1—10—42-ல் சாரணர்தினம் கொண்டாடப்பட்டது. சாரணர்களும் மற்ற மாணவர்களுமாகச் சேர்ந்து முக்கிய தெருக்கள் வழியாக ஊர்வலம் வந்தார்கள். பாடசாலைக் காம்பௌண்டில் ஹிந்துஸ்தான் சாரணக்கொடி நாட்டப்பட்டு கொடி வணக்கம் நடைபெற்றது. அப்

பொழுது 1 முதல் 8-வது வகுப்புவரையுள்ள 414 மாணவர்களும் வரிசை வரிசையாக நின்று கொடி வணக்கத்தில் பங்கெடுத்துக்கொண்டார்கள். ஸ்கௌட்மாஸ்டர் ஸ்ரீ ரத்தினசபாபதி பையன்கள் எல்லாரும் ஸ்கௌட்டில் சேரும்படி உத்சாகப்படுத்தி அதனால் ஏற்படும் நன்மைகளை எடுத்துக் கூறினார். கப் மாஸ்டர் ஸ்ரீ முத்துசாமி பிள்ளையும் சிங்கக்குட்டிகளைப்பற்றிப் பேசினார்.

---

## திருச்செங்கோடு தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன், கொங்கணாபுரம்

20—9—42-ல் நிர்வாகசபை யூனியன் தலைவர் ஸ்ரீ வெங்கட்டராம அய்யர் அவர்கள் தலைமையில் கூடிற்று. 17 அங்கத்தினர்கள் ஆஜராகி இருந்தனர். ஜில்லா ஆசிரிய சங்கக் காரியதரிசி ஸ்ரீ செங்கல்வராய அய்யர் விஜயம் செய்திருந்தார். தலைவர் முகவுரைக்குப்பின் ஸ்ரீ செங்கல்வராய அய்யர் அவர்கள், ஆசிரிய சங்கங்களின் அவசியத்தைப்பற்றியும், தென்னிந்திய ஆசிரிய சங்கம், ஜில்லா ஆசிரிய சங்கம், தென்னிந்திய ஆசிரியசங்க பாதுகாப்புநிதி, பாலர்கல்விப் பத்திரிகை இவைகளின் நன்மைகளைப்பற்றிச் சொற்பொழிவு செய்து இவைகளில் சேர்ந்து நன்மையடையுமாறு கேட்டுக்கொண்டார். தீர்மானங்கள் :—

1. அகில இந்திய ஆசிரிய சங்கத்தலைவர் ஸ்ரீ சேஷாத்திரி, தேசபக்தர் ஸ்ரீ மகாதேவ தேசாய் இவர்களின் அகால மரணத்திற்கு அனுதாபம்.

2. ஜில்லா ஆசிரிய சங்கத்தில் ஆரம்ப ஆசிரியர் யூனியனுக்குத் தனிப்பிரிவு ஏற்படுத்தும்படி.

3. ஆரம்பப் பள்ளிகளின் நன்மையைக் கருதி உயர்தரப் பள்ளியில் 4-வது வகுப்பை எடுத்துவிடும்படி.

4. 300 மாணவர்களுக்கு மேல்பட்ட பாடசாலைக்கு ஒரு பியூன் நியமனம் செய்யும்படி.

5. ஆரம்ப ஆசிரியர்களுக்கு பஞ்சப்படியும், சாதல்வார் தொகையை அதிகமாயும் கொடுக்கும்படி.

---

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், அதமன்கோட்டை

12—9—42-ல் இச்சங்கக் கூட்டத்துக்கு ஜில்லா கல்வி அதிகாரியும் டிப்டி இன்ஸ்பெக்டரும் விஜயம் செய்திருந்தனர். காரியதரிசி எண்கள் விளையாட்டு மூலமாக மனக்கணக்கு போதிக்கும் விஷயத்தை விளக்கிக் காட்டினார். 200 வார்த்தைகளில் விநாயக சதுர்த்தி கட்டுரை படிக்கப்பட்டது.

கனம் ஜில்லா கல்வியதிகாரி அவர்கள் முதல் வகுப்புக்கு விளையாட்டு மூலம் வார்த்தைகளையும், எண்களையும் எப்படி போதிப்பது

என்பதை உபகரணங்களைக்கொண்டு விளக்கிக் காட்டினர். பிறகு ஆசிரியர்கள் உற்சாகத்துடன் உழைத்து தங்கள் தொழிலை மேன்மையுறச் செய்ய வேண்டுமென்று கூறினர்.

கவர்ன்மெண்டு ஊழியர்களுக்களிப்பதுபோல் ஆரம்ப ஆசிரியர்களுக்கும் யுத்தப்படி கொடுத்துதவும்படி அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளத்தீர்மானித்தது.

---

## போர்டு ஆரம்ப ஆசிரியர் யூனியன், ராசீபுரம்

4—10—42-ல் பொதுச் சபை கூடி தீர்மானித்தவை :—

1. சென்னை சர்க்கார் அறிக்கைப்படி யுத்த அலவன்ஸ் கொடுத்துதவும்படி.

2. சாமான் விலையும், தபால் கட்டணமும் அதிகரித்திருப்பதால் சாதல்வாரை 50% உயர்த்தும்படி.

3. திருத்தப்பட்ட யூனியன் விதிகள் அங்கீகரிக்கப்பட்டன.

4. H. E. S. L. C. பரீக்ஷைக்கு எல்லா செக்கண்டரி கிரேடு ஆசிரியர்களையும் உதவி பரீக்ஷாதிகாரிகளாக நியமிக்கும்படி.

5. பஞ்சாயத்து போர்டு ஆசிரியர்களுக்கு டீச்சிங் கிராண்டுத் தொகை காலாகாலத்தில் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யும்படியும், அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகிறது.

---

## டவுன் ஆரம்ப ஆசிரியர் சங்கம், தஞ்சாவூர்

3—10—42-ல் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ டி. வி. வெங்கட்டராமய்யர் அவர்கள் தலைமையில் கூடிற்று. தேசிய முன்னணி சொற்பொழிவாளர் ஸ்ரீ M. சுப்ரமணியம் அவர்கள் தற்கால யுத்தத்தின் தன்மையும் ஆரம்ப ஆசிரியர் கடமையும் என்பது பற்றிப் பேசினர். தலைவர் கணிதம் போதித்தல் என்பது பற்றிப் பேசினர்.

---

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், தூத்துக்குடி

இச்சங்கத்தின் செப்டம்பர் மாதத்திய கூட்டம் ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ஏ. ஸ்வாமிநாதன் அவர்கள் தலைமையில் கூடிற்று. அப்பொழுது டாக்டர் டி. டி. தாமஸ் அவர்கள் ஏ. ஆர். பி. முதலுதவி விஷயமாய்ப் பேசினர். தலைவர் அவர்கள் இயற்கைப் பாடம் போதனை முறையைப்பற்றிப் பேசினர்.

---

## ஸ்ரீ கிருஷ்ணம்மாள் வித்யாசாலை, து. ரெங்கநாதபுரம்

5—9—42 முதல் 11—9—42 வரை பாரதி வாரம் கொண்டாடப்பட்டது. தினம் ஊர்வலம். பிள்ளைகளும் பெண்களும் பாரதி பாட்டுப் போட்டியில் கலந்துகொண்டனர். பாரதி பாட்டு புஸ்தகங்கள்

பரிசாக வழங்கப்பட்டன. 11வ மாலையில் பாரதியாரைப்பற்றிப் பல பிரமுகர்கள் பேசினார்கள்.

இத்துடன் பாடசாலை தினமும் கொண்டாடப்பட்டது. தேர்ச்சி பெற்றவர்களுக்கும், நன்னடத்தை யுடையவர்களுக்கும், ஒழுங்காகத் தவறாமல் பள்ளிக்கூடம் வந்தவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. இரவில் மாணவர்கள் 'வீரத்தாயி' என்ற நாடகத்தை நடித்துக் காட்டினர்.

---

## ஆரம்ப ஆசிரியர்கள் சங்கம், திருச்சி

3—10—42-ல் ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ வி. கே. ராமன் மேனன் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. டிப்டி இன்ஸ்பெக்டர்களும் வந்திருந்தனர். வரவேற்புப் பத்திரம் படித்து அளிக்கப்பட்ட பிறகு தலைவர் பேசுகையில் கிராமப் பள்ளிக்கூடங்களுக்கும், நகரப்பள்ளிக்கூடங்களுக்கும் ஆஜர் முதலியவற்றை ஒப்பிட்டும், கிராமங்களில் அறுவடை காலங்களில் குழந்தைகளை பள்ளிக்கூடம் அனுப்பாமல் வீட்டு வேலைக்கு வைத்துக்கொள்வார்கள் ஆனால் நகரங்களில் அம்மாதிரி இல்லாததால் நகரத்திலுள்ள ஆசிரியர்கள் அவ்விடங்களை நூற்றுக்கு நூறு படிப்பாளியுள்ளவைகளாகச் செய்யவேண்டுமென்றும், கிராமங்களுக்கு அனுகூலமான படிப்புக்களையும் குழந்தைகளுக்குப் போதித்தால் பெற்றோர்கள் தாமே குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பவார்கள் என்றும் விரிவாக எடுத்துரைத்தார். பின்பு டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ லக்ஷ்மண அய்யர் ஆசிரியர்களுக்கு, டவுனிலுள்ள பள்ளிக்கூடம் சேரும் வயதுள்ளவர்களைக் கணக்கெடுத்து அவர்களைச் சேர்க்கவும், பையன்களைப்பற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்ளவும், டவுனில் நூற்றுக்கு நூறு படிப்பாளிகளாக்கவும் முயற்சி எடுத்துக்கொள்ளும்படி போதித்தார்.

---

## போர்டு ஸ்கூல், வெண்ணந்தூர்

8—10—'42-ல் இப்பாடசாலையில் பெற்றோர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜனாப் மகம்மது காதர் பாக்ஷா சாகிப் தலைமை வகித்தார். அவர் முன்னுரையில் பெற்றோர் சங்கத்தின் அவசியத்தைப் பற்றியும், நவீன பாடத்தின் அம்சங்களைப் பற்றியும், கல்வி என்னும் கட்டடத்திற்கு நான்கு தூண்களாக இருப்பது, 1. குழந்தை, 2. பெற்றோர், 3. உபாத்தியாயர், 4. அதிகாரி என்றும், பள்ளிக்கூட இடவசதிக்கு கிராமத்தார் உதவி செய்யவேண்டுமென்றும் சொன்னார். பிறகு காரியக்கமிட்டி அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் பின்னுரையில் இச்சங்கம் அடிக்கடி கூடி உத்சாகத்துடன் உழைத்துவர வேண்டுமெனக் கூறினார்.

---

# பத்திராதிபர் குறிப்பு

---

## பன்னிரண்டாவது தென்னிந்தியக் கல்விவாரம்

தென்னிந்திய ஆசிரிய சங்கத்தார் கல்வியில் ஈடுபட்டுள்ள மற்றச் சங்கத்தார், பிரமுகர்கள் முதலியவர்களின் ஆதரவைக்கொண்டு வருடந்தோறும் கல்வி வாரத்தைத் தென்னிந்தியா முழுவதும் சிறப்பாக நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். இவ்வருடம் நடத்தப்போவது பன்னிரண்டாவது கொண்டாட்டமாகும்.

பாடசாலைகளில் உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்காகச் செய்யும் ஊழியத்தையும் பாடசாலைகளுக்கு வேண்டிய சௌகரியங்கள் எவை என்பதையும் பொது ஜனங்கள் சாதாரணமாக அறிவதில்லை. இக்குறையை நீக்குவதே கல்விவாரக் கொண்டாட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

சாதாரணமாகவே ராஜீயப் போராட்டங்கள், சண்டைகள் இவைகளுக்கிடையே பொது ஜனங்கள் கல்வியின் அவசியத்தை மறந்துவிடுவார்கள். இப்பொழுது நடக்கும் யுத்தத்தின் காரணமாக ஜனங்கள் சமூகத்தின் நாகரீகத்திற்கு இன்றியமையாதது கல்வி என்பதை முழுவதும் மறந்து விடக்கூடும். ஆதலால்தான் கல்வியில் ஈடுபட்டுள்ளோர் பொது ஜனங்களுக்கு அதன் அவசியத்தை இடைவிடாது வற்புறுத்தல் அவசியமாகும்.

## இவ்வருடத்திய கல்விவார நிகழ்ச்சிக் குறிப்பு

இவ்வருடத்தியக் கல்வி வாரத்தில் சர்ச்சைக்கு எடுத்துக்கொள்ளப்படும் விஷயம் "கல்வியும் யுத்தத்திற்குப்பின் நிர்மாணமும்" **(Education and Postwar Reconstruction)** என்பது. வாரத்தின் நிகழ்ச்சிக் குறிப்பு பின் வருமாறு :—

முதல் நாள் —**கல்வியும் தற்கால வேதனையும்.**

இரண்டாம் நாள்—**கல்வியும் யுத்தத்திற்குப்பின் சமூகமும்.**

மூன்றாம் நாள் —**கல்வியும் யுத்தத்திற்குப்பின் பிரஜையுரிமையும்.**

நான்காம் நாள் —**தேசிய சுகாதாரமும் யுத்தத்திற்குப்பின் கல்வியும்.**

ஐந்தாம் நாள் —**தொழிற் பயிற்சியும் யுத்தத்திற்குப்பின் கல்வியும்.**

ஆறாம் நாள் —**வீடும் யுத்தத்திற்குப்பின் கல்வியும்.**

ஏழாம் நாள் —**குழந்தையும் புதிய உலகமும்.**

**கல்வி வாரத்தைக் கொண்டாடுவதெப்படி?**

1. நீங்கள் இருக்கும் வட்டாரத்திற்கு ஒரு கல்வி வாரக் கமிட்டி ஏற்பாடு செய்யுங்கள். அதற்கு அங்கத்தினர்களாகப் பெற்றோர்கள், மானேஜர்கள், போர்டு மெம்பர்கள், வியாபாரிகள், டாக்டர்கள், வக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள் போலொத்த பிரமுகர்களைச் சேர்க்கவும்.

2. பள்ளிக்கூடத்தில் சிறுவர்கள் செய்த வேலைகளைக்கொண்டு பொருட்காட்சி தயார் செய்யவும்.

3. பெற்றோர்களும், பொது ஜனங்களும் வந்து பார்க்கும்படி பள்ளிக்கூடங்களில் சௌகரியங்கள் கொடுக்கவும்.

4. கல்வி வாரத்தில் ஒவ்வொருநாளும் பொதுக்கூட்டம் கூடி கல்வி விஷயமாகத் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டுப் பேச சாதாரண ஜனங்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கவும்.

5. உங்கள் சுற்றுப்புறங்களில் "எழுதப்படிக்கத் தெரியாமை" என்னும் பெருங்குறையை அகற்ற ஏற்பாடுகள் செய்யவும்.

சென்ற வருஷங்களில் ஐப்பசி மாதத்தில் ஒரு குறிப்பிட்ட வாரத்தில் நாடெங்கும் இக்கல்வி வாரம் கொண்டாடப்பட்டது. தற்போதுள்ள நிலைமையின் காரணமாக இவ்வருஷத்தில், கல்வி வார மத்தியக் கமிட்டி ஒன்று கூட்டவில்லை. தவிரவும், அங்காங்கு சௌகர்யமான, இம்மாதத்தில் ஏதாவது ஒரு வாரத்தைக் கல்வி வாரமாகக் கொண்டாடவேணுமாய்க் கேட்டுக் கொள்கிறோம். 'செல்வத்தில் சிறந்தது கல்விச் செல்வமே' என்பதின் கருத்தை நமது பொது மக்களை நன்கு உணரச் செய்வது நமது பொறுப்பாகும். கல்வி வாரத்தில் பெற்றோர்களை நமது கல்விச் சாலைகளுக்கு அழைத்துப் பாலர்களுக்கு எவ்வாறு கல்வி பயில்விக்கப்படுகிறதென்பதையும், பாலர்கள் செய்து வரும் வேலைகளையும் அவர்கள் பார்த்து சந்தோஷிக்குமாறு செய்து அவர்களின் ஆதரவையும் அன்பையும் அடைய முயலவேண்டும். கல்வி அபிவிருத்தியினால்தான் நாடு முன்னேற்ற மடையவேண்டும். இம் முன்னேற்றம் பெரும்பாலும் ஆசிரியர்களையே பொறுத்துள்ளது.

---

மாணவர்களே! வாலிபர்களே!!

உங்களுக்கென சமைத்து வைத்துள்ள

**சுவாமி விவேகாநந்தர்**

**ஞான அமிழ்தத்தை உண்ணுங்கள்.**

★

| | | |
|---|---|---|
| ஸ்ரீ விவேகாநந்த சரித்திரம் | விலை | 0—12—0 |
| ,, ,, கடிதங்கள் | ,, | 0—10—0 |
| ,, ,, நமது தாய் நாடு | ,, | 0— 8—0 |
| ,, ,, சுவாமிகள் | ,, | 0— 3—0 |
| ,, ,, எனது குருநாதர் | ,, | 0— 3—0 |

★

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக

**ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,** மயிலாப்பூர், சென்னை.



REGD. No 1506

அசோகா

MILD SCENTED

ASOKA

ரிஜிஸ்டர் நே. 1506

**அசோகா சுகந்த பாக்கு தூள்**

தயாரிப்பவர்:

எம். கே. கிருஷ்ண செட்டி,

அசோகா பாக்டரி,

கோயமுத்தூர்.

*Regd. No. M. 3473*


S. I. T. U. PROTECTION FUND, LTD., MADRAS

BAZAAR ROAD, VILLUPURAM.

## செலுத்த வேண்டிய தொகை

30 வயதுக்குள்ளிருப்பவர்கள் :

சேரும்போது

பிரவேசக் கட்டணம் .... ரூ. 1.

வருஷக் கட்டணம் .... ரூ. 2.

மாதச் சந்தா .... ரூ. 1 முதல் 4 வரையில்

பிரதி வருஷமும் சேரும் மாதத்தில் .... ரூ. 2

பிரதி மாதமும் .... ரூ. 1 முதல் 4 வரையில்

30 வயதுக்கு மேலிருப்பவர்கள் :

அதிக வயது ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 அதிகமாக, சேரும்போது மாத்திரம் பிரவேசக் கட்டணம் செலுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| தற்கால கையிருப்பு | ... ... | ரூ. 2,25,000 |
| பாலிஸிக்கள் | ... ... | 1,350 |
| யூனிட்டுகள் | ... ... | 2,500 |

## அனுபவிக்கும் லாபம்

1. மரணம் ஏற்பட்டால், நியமித்த வார்சுகளுக்குத் திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.

மாதா மாதம் ரூ. 1 செலுத்தினால், கிடைக்கக்கூடிய பணம் ரூ. 250 முதல் ரூ. 375 வரை.

2. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து கடன் பெற்றுக்கொள்ளலாம்.

3. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து விலகும்படி ஏற்பட்டால், திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.


Printed by K. Sadagopachariar at the Liberty Press, 10, Linghi Chetty St., Edited & Published by Mr. M. S. Sabhesan, M.A., "for The South India Teachers' Union." 520, High Road, Triplicane, Madras.